முருகப்பெருமான் துணை

**மகான் மிருகண்டரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.08.2023**, வியாழக்கிழமை

1. அறம்தனை உலகம் எங்கிலும்
   ஆற்றலாக விதைத்து முளைக்க
   வரம் பெற்று வந்த ஞானியே
   வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் அறிவுரை ஆசி
   வரங்களாய் சோபகிருது நள்ளிதிங்கள்
   வல்லமையான முப்பானீர் திகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 32 ம் நாள், 17.08.2023, வியாழக்கிழமை)
3. குருவாரம்தனில் மிருகண்டரிஷி யானும்
   குவலயம் மேன்மைபெற உரைப்பேன்
   பெருமை மிக்க தரும வழிகளை
   பிரணவக்குடில் படைத்து அருளும்
4. அருளும் அன்னதான நெறி
   அருள்தயவு காட்டும் நெறி
   இருளை நீக்கி உலகினில்
   இணையிலா ஞானஒளி ஏற்றும் நெறி
5. நெறிதனை கலியுக மக்கள்
   நீதி நெறியாகவே ஏற்று
   அறிவுத் தெளிவு காணும்படி
   அரங்கனிடம் தீட்சை அடைந்து
6. அடைந்து அகலாத வண்ணம்
   அனுதினமும் பூசை பணிகளை தொடர
   தடையற தருமப் பணிகளை
   தன்கடமையாக உலகோர் செய்து

7. செய்துமே ஞானபலம் பெற
சிறப்பான தருமபலமும் பெற
அய்யமற எங்கும் தருமஞான
ஆற்றல் பெருகி உலகமாற்றம்
8. மாற்றம் இனிதே காணும்
மக்களெல்லாம் பாதுகாப்புப் பெற
மாற்றம் மகாசக்திகள் இறங்க
மண்ணுலகில் வளர்ச்சி காணும்
9. காணும் அரங்கன் அவதாரம்
கலியில் நிறைவேறும் வண்ணம்
ஞான உலகாக மாற்றமும்
ஞானவான்கள் ஆகவே மக்களும்
10. மக்களும் நிலைகள் உயர்ந்து
மறுமையும் மரணமும் வென்று
ஆக்கமுடன் அரங்கன் வழி
அனைவரும் ஞானிகளாகி
11. ஆகியே ஞான ஆட்சிதனை
அகிலமதில் படைத்து சிறப்பர்
மகிழவே மக்கள் வாழ்வு சிறக்கும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—